அகவொளி வெளியீடு

# மீண்டும் எழுவாய்

சின்னக்குழந்தை கூட மெல்ல

நடக்கையில்

நித்தம் வீழ்கிறது

மீண்டும் எழுவாய்

முடிவிலி வரை செல்வாய்

முயற்சியை கைவிடாதவரை

சுவாசி மூச்சுக்காற்றையல்ல

முயற்சியை .. காதலி



ஆபிரகாம் மக்ஸ்லோ, கால்ரொஜர்ஸ், ஆகியோரின் மனிதாய உளவியல் எண்ணக்கருக்களைத் தழுவி உருவானது

மருத்துவ கலாநிதி
வெ.நாகநாதன்

# மீண்டும் எழுவாய்

தென்பூட்டல் உரைவீச்சு


மருத்துவ கலாநிதி
வெ.நாகநாதன்

ஆபிரகாம் மக்ஸ்லோ, கால்ரொஜேர்ஸ் என்பவர்களின்
மனிதாய உளவியல் எண்ணக்கருக்களைக் கொண்டு
உருவாக்கப்பட்டுள்ளது.

அகவொளி வெளியீடு:

| | |
|---|---|
| நூலின் பெயர் | :- மீண்டும் எழுவாய் |
| ஆசிரியர் | :- மருத்துவ கலாநிதி<br>வெ.நாகநாதன் |
| தொடர்பு | :- *vetri 124 @ gmail.com.* |
| பக்கம் | :- 52 |
| விலை | :- |
| முதற்பதிப்பு | :- 2008 (இந்தியாவில்) |
| இரண்டாம்பதிப்பு | :- 2008 |
| பதிப்புரிமை | :- ஆசிரியருக்கே |
| வெளியீடு | :- அகவொளி<br>குடும்பவளத்துணை நிலையம்<br>சென்பற்றிக்ஸ் றோட்,<br>யாழ்ப்பாணம். |

புதிய புயல்கட்கு
வணக்கம்........



பூமிப்பந்தின் சுழற்சியினதும்,
கால ஓட்டத்தின் வேகத்தினதும் புதிய பரிமாணத்திற்கும்,
ஆர்முடுகல் இயக்கத்திற்கும்...... நெருக்கீடு என்னும்
மன உளைச்சலின் அபரிமித வளர்ச்சிப் போக்கில்
எம் உறவுகள் உளம் தளர்கின்றன, அத்துடன் நின்று விடாது,
விரக்தியை சகிக்க முடியாமலும், திசை தவறி.......திக்கற்று
திணறுகின்றனர்..... எமது சமூகத்தின் ஆன்மாவை உயிரூட்ட..........
தமிழன் என்ற வல்லாண்மை மிக்க எம்மினத்தின் மனோதிடம் கொண்ட
நாளைய சமுதாயத்தை நாம் காண வேண்டும் என்ற

நம்பிக்கையுடன்
நாளை உங்களுக்காக மலர.......
ஈர வீழிகளுடன்,



எனக்கு தைரியப்பால் தந்து
மனோதிடம் வளர்த்து புற்றுநோயின் பிடியில்
சிக்கி இன்றும் என்னோடு உடனிருந்து எனக்கு
மனோபலம் சேர்க்கின்ற என்
அன்னையின் வார்த்தைகள்..........
கவிதைகளாகி

அறிஞர் சாலையாரின் உரைவீச்சு
நடையில் கவிதையிலிருந்து சற்று
விலகி உருவாக்கப்பட்டுள்ளது

முதற்பதிப்பில் உதவிய அறிஞர் சாலையாரின் அடியையொற்றி
நடக்கும் முற்போக்கு சிந்தனையாளர் கா.கோ.தமிழ்வேந்தன்
அவர்கட்கு நன்றிகள்

# ஆசியுரை

இந்நூலானது மிகவும் பக்குவமான சொற்தொகுப்புடன் எளிய உரைநடையில் ஆழமான கருத்தோட்டத்தையும் கொண்டுள்ளது.

மீண்டும் எழுவாயினுள் காலடி எடுத்துவைக்கும் ஒவ்வோர் மனிதனும் தனக்கான மிக உறுதியான மனவலிமையை பெறமுடியும் என்பதில் ஐயமில்லை. ஒரு மனிதன் தனக்கான ஒரு வலிமை மிக்கி உட்கட்டுமானத்தை தானாகவே அமைத்துக்கொள்ள முடியும் என்ற ஆபிரகாம் மக்ஸ்லோ மற்றும் கால் ரொஜேர்ஸ் என்பவர்களின் மனிதாய உளவியல் கருத்துக்களை தழுவி ஒவ்வொரு படைப்புக்களும் இலகு தமிழில் அச்சுருவில் செதுக்கப்பட்டுள்ளது.


முற்றுமுழுதாக ஒரு சமூக உளவியல் நோக்கில் ஒரு மனிதனை ஆற்றல் மிக்க மனிதனாக உருவாக்கி, ஆளுமையை வளர்த்துக்கொள்ள, திறமைகளை நிதர்சனப்படுத்த ஒவ்வொரு மனிதனுள்ளும் பொதிந்துள்ள ஆற்றல் என்ற அதிபெரும் சக்தியை வெளிக்கொணர ஏற்ற வழிகாட்டியாக அமைகின்றது.

பலவீனன் என்று எண்ணும் மனிதனை எறும்புகூட திரும்பிப் பாராது. எதிரிக்கே நீ பலசாலிதான். நீ பலவீனன் அல்ல என்னும் புதிய தத்துவவியல் எண்ணக்கருக்களை கொண்ட இந்நூலை இளம்வயதில் உயிர்பெறச் செய்து மனவலிமை மிக்க சமூகத்தை உருப்பெற எத்தணிக்கும் மருத்துவ கலாநிதி வெ.நாகநாதன் எண்ணம் நிறைவேற எம் ஆசிகளும் இறைவனின் கிருமைபகளும் உரித்தாகட்டும்.

அருட்பணி செ.யே.இராஜநாயகம்
BTh[rome]MA. couns. Psy (Ottawa, Canada)
இயக்குநர்
அகவொளி
குடும்பவளத்துணை நிலையம்
சென். பற்றிக்ஸ் றோட்
யாழ்ப்பாணம்

# கட்டியெழுப்புங்கள்

வானவெளியில் முகில்களுடன் கைகுலுக்கும் கட்டிடங்களை
பார்க்கும்போது மனதில் ஏதோ ஒரு எண்ணம் சிறகடிக்கும்
எனினும் அங்கு நாம் சிந்திக்க வேண்டியது யாதெனில் இக்கட்டிடத்தின்
அடித்தளம் என்ற உட்கட்டுமானம் எவ்வளவு உறுதியானது என்பதை
இக்கட்டிடங்களின் அத்திவாரம் என்ற அடித்தளத்தை நிலக்கீழ் மாடிகள்
தான் உருவாக்கின்றன........
பனிக்கட்டி மிதக்கும்போது சிறுபகுதிதான் கண்ணுக்கு மேற்பரப்பின்
மீது புலப்படும். எனினும் நீரின் அடியில் பெரும்பகுதி அமிழ்ந்து காணப்படும்.....



ஒரு மனிதனின் சாதனைகள்
எல்லாவற்றின் அடியிலும் ஒரு மிகப்பெரிய
மனோதிடம் என்கின்ற தன்னம்பிக்கை மறைந்துள்ளது. நாம்
கண்ணுக்குப் புலப்படும் சாதனைகளை கட்டியெழுப்பும் முன்பு எவர்
கண்ணிலும் எளிதில் தென்படாத மனோதிடத்தை கட்டி எழுப்பிக் கொள்ள
வேண்டும்.




## ஒரு தடவை சந்தியுங்கள்...........

எதிர்ப்போ சவாலோ ஒரு தடவை சந்தியுங்கள்...... கழுகுகள் எல்லாம் புயலை எதிர்த்துப் பறப்பதென்றால் அவற்றிற்கு பேருவகை...........

மாவே என்னும் மாபெரும் சக்திவாய்ந்த மனிதரோ ஆற்றின் ஓட்டத்தை எதிர்த்து உள்முக நீச்சலடிப்பது என்றால் அவருக்கு அதைவிட மகிழ்ச்சியான விடயம் இல்லை. எதிர்நீச்சல் என்று ஆற்றுடன் மட்டுமல்ல வாழ்விலும் கற்றுத்தந்த பாடமாகும்.


எமது சமூகத்தில் மாணவர்கள் ஒரு கணித செய்முறையை கூட மனதில் யோகிக்க எத்தணிக்காது எத்தணிக்க முன்பே அவற்றை தவிர்த்து விடுகின்றனர்.

# சவாலே சமாளி



முடியாமல் போய்விடுமோ என்று
முயற்சிக்கு முன்பே அலுத்துப் போகாதே
சவால் இருப்பின் தான்
செயற்பட உள்ளம் நினைக்கும்.
எதிரி ஏன் வந்தான்
என்று ஏங்கித் துவளாதே
எதிரி இருப்பின் தான்
சாதிக்க உள்ளம் நினைக்கும்
சிக்கல் கண்டு சிதைந்து போகாதே
சிந்தனை செய்யாமலே
சிக்கல் இருப்பின் தான்
சிந்திக்க உள்ளம் நினைக்கும்
நெருக்கீடு ஒன்றும் நெருப்ப

# நீ தான் உலகில் கைவிடப்பட்ட முதல் மனிதனல்ல



நீ கைவிடப்பட்டவன் - என்று
எண்ணாதே
உன்னிடமிருந்து பழம் தின்ற
பறவைகள் தான்
உன்னை கைவிட்டன ? ஆனால்
உன் வேர் உன்னைக் கைவிடவில்லை
நீ பிறக்கமுன் உன் தாயில்
பாலை சுரக்கவைத்து ? பதமாய்
உனக்கூட்டிய - இறைவன்
உன்னை கைவிடுவானா?
பரவாயில்லை
கவலைப்படாதே
நீ தான் உலகில்
கைவிடப்பட்ட முதலாவது மனிதனா?
இன்றைய........
சிங்கப்பூர் தேசம் கூட
அன்று சுதந்திரம் கிடைக்கையில்
மலேசியாவினால் கைவிடப்பட்டு
விட்டோமே என்று எண்ணி
துக்கம் தான் கொண்டாடியது.......
என்ன சிங்கப்பூர்
செத்தா போனது.....
கைவிடப்படாதிருப்பின்
இப்போதும் அப்படியேதான் மலேசியாவின்
மடியில் தவளும் குழந்தையாகத்தான்
இருந்திருக்கும்.


## தோல்வியில் கூட கடவுள் உன்னோடுதான்

உலகுக்கு நீ சுமையல்ல
உலகம் உன்னை தன்மீது
தாங்கி வைத்திருக்கிறது
நீ மட்டும் தான் சுமை என்று
என்கிறாய்........ இம்மாம் பெரிய உலகம்
உன்னை என்றாவது..... என்மீது
உலாவித்திரியாதே என்று சொன்னதுண்டா
நீ தோற்றுப்போனாய் - சரி
நீ பொய் சொல்லாதே ? உலகின்
எல்லா உயிர்களும் உன்னை
ஏளனம் செய்வதாய்
எங்கோ ஓர் உயிராவது உனக்கு
எப்படியோ உதவ ஓடிவரும்
எப்படியும் உன்னை தேற்ற
எண்ணும் அன்பை
அள்ளி வழங்கும் - உண்மை
அன்பை அறிவாய்
ஆண்டவன் எப்போதும்
ஒரு கதவு மூடப்படும்போது
இன்னோர் கதவு திறக்கப்படும்



## இழப்புக்கு நிறமில்லை

இழப்பு சந்தித்த முதல் மனிதன்
நீயுமல்ல
இழப்பை சந்தித்த முதல் மனிதன்
நீயுமல்ல
வரலாற்றில்
நொந்து போகாத நெல்சன் இல்லை
நெருக்கீடு காணாத நெப்போலியன் இல்லை
மானச்சரிவு காண வின்சன் சேர்ச்சில் இல்லை
அடுத்தடுத்து தோல்விகாணா
ஆபிரகாம் லிங்கன் இல்லை
வரலாற்றில் துன்பியல் வரலாறு
காணாத மனித இனமில்லை



## தோல்வியில்...............

தோற்றுப்போகும்போது கழன்று போகின்ற நண்பர்களை எண்ணி கவலைப்படாதே நண்பர்களின் எண்ணிக்கை அதிகரிப்பின் உன் இரகசியங்கள் காக்கப்படும் தன்மை குறைவாகவே இருக்கும். நண்பர்களின் எண்ணிக்கை குறையும் போது கருத்து வேறு-பாடுகள் ஏற்படும் சந்தர்ப்பமும் குறையும். இரகசியங்கள் பேணப்படும் உண்மைத்தன்மை காணப்படும்.
இரகசியங்கள் காக்கப்படும்போது உன் பலவீனங்கள் உன்னைப் பரிகசிக்கும் மனிதர்களை சென்றடையாது போகின்றது.
பலவீனங்களைப் பரப்புரை செய்யும் மனிதர்களை இயற்கை தா-னாகவே எமது பலவீனமான காலங்களில் உதிர்க்கச் செய்து விடுகிறது.



**வேர் உன்னோடிருக்க**
**வீழ்கின்ற கனிக்கேன்?.......**

வசந்தகாலத்தில் உன் உதவியுடன்
வாசனை வீச
வண்ண மலர்கள் தேடிவரும்
கனி உண்ண
காகம் குருவி தேடிவரும் துன்பத்தில்
கடைசியில் பூக்கள் பொத்தென்று
கழன்று போகும்
கனிதின்ற பறவை
காலால் கிளையில் உதைத்துவிட்டு
எச்சமிட்டு
எழும்பிப்பறக்கும் - இருப்பினும்
இலையுதிர் காலத்தில்கூட ? உன்னை
இறவாது காக்கும்
கண்களறியாத
கடவுளது வேர்.



## தோல்வியில் கூட வெற்றி உண்டு

இலை உதிர்காலம்
இல்லை என்றால்
இயற்கைக்கு வளமேது
உதிர்கின்ற இலைகள் தான்
உரமாகின்றன இயற்கைக்கு
கஷ்டகாலத்தில் தான்
கற்றுக் கொள்கிறாய்
சிக்கனத்தை
ஆபத்துக்காலத்தில் தான்
அறிகின்றாய் உண்மை நட்பை
தோல்வியின் பின் தான்
துணையின்
உண்மைத் தன்மை அறிவாய்



# வெற்றி பெற தகுதியான நீ



உலகை வென்ற
நெப்போலியன் கூட
உருவத்தில் சிறியவன்
நித்திரை இல்லா நோயால்
நித்தமும் தவித்தவன்
உலகை வென்றோரில் பாதி
உடல் ஊனமானோர்
உலகை வென்ற போர்வீரர்களில்
எத்தனையோ பேர்
உளச்சோர்வை சந்தித்தவர்கள்
உலகை வென்ற
மேதைகளில் கூட
உளப்பிளவை நோயை
சந்தித்தவர்கள்
உண்டு
உலகம் இப்படி இருக்க ? நீ
உன்னைப்பார்.......
ஆரோக்கியமாக இருக்கும்
நீ மட்டும்
உன்னை தகுதியற்றவனாக
சொல்லுவது சரியா??
தப்பா???

## தடை? ஒன்றும் தடையல்ல....

தடைகள் என்பது ஒவ்வொரு மனிதனதும் சிந்தனையை
சிறக்க செய்பவை, மாற்று வழிகளை நாடச் சொல்கின்ற
ஆண்டவன்
கட்டளைகள் தடைகள் எதிர்ப்புக்கள் வரும்போது தான்
சமூகம் விழிப்படையும், இருட்டும்போது தான் வானில்
வெள்ளிகள் முளைக்கின்றன. உலகம் வியக்கும்
சக்தி வாய்ந்த மனிதர்களை
எல்லாம் உருவாக்குவது, வளர்ந்து
விருட்சமாக்குவதெல்லாம்
உலகத்தின் தடைகள் தான்

## காதல் செய் - காதலி உன்னை



கனவுகான் கலாம் சொன்ன மொழி
முடியாதென்று நினையாதே
ஏற்றுக்கொள் உன்னிடம் திறமை
ஏராளம் உண்டென்று
நிலவு நீந்துகிறது அங்கு
துடுப்பு வலிப்பவர் யார்
எறிகணை பறக்கிறது அதற்கு
இறக்கை எங்கே
வாவியின் காணம் கேள் - அதற்கு
வாய் உண்டா சொல்
காயம் கண்டு கண்ணீர் வடிக்கவில்லை
- பதநீரைத்தான் தருகிறத பனை
- பாலைத்தான் சுரக்கிறது இறப்பர்
நெருக்கீடில்லா வாழ்வில் ருசியில்லை
மேடு கட ? நீ ? உயரில்லா
நதிகூட கடக்கிறது ஏராளம் மேடு
நீ மட்டும்........ ஒருமுறை..........
எண்ணிப்பார்
மேடுகடவாத நதியால் முடியாது மின்சாரம்
ஜெனிக்க
தடை காணப்படை கிடையாது பூவில்
படை எடு தடை தானே விலகும் பூவில்

✤

## நோய் ஒன்றும் தடையில்லை முன்னேற

நோயில்லாத மனிதன்
நூறில் ஒருவன் இருந்தால் சொல்
சேகுவேரா அடர்ந்த கடும் குளிர் காட்டில்
மூச்சுமுட்டும் சுவாச நோயுடன் தான்
போர்க்கோலம் கொண்டார்.............
உலகை வென்ற நெப்போலியன் கூட
நித்திரை இன்மை நோய் பற்றி அதிகம்
நினைக்கவில்லை ? யோசி
உலகின்ற எத்தனை பிரபல்யங்கள் எனின்
உன்னை நீ சிறிதாய் எண்ணும்
(நீ) நோயை பற்றி
ஏன் கவலைப்படுகிறாய்
நீ முன்னேற நோய் ஒன்றும்
தடையில்லை




## ஏளனம் செய்தவனை.........

ஏளனம் செய்பவர்கள், பழிவாங்குபவர்கள்
என்ற வகையை சேர்ந்த மனிதர்களை பழிவாங்க
வேண்டும்.... பழிவாங்குவது என்பது வெறும் கருத்தற்ற
முறையில் அல்ல.
நீங்கள் முன்னேறிக்கொண்டு செல்லும்போது
இவர்கள் எல்லாம் தானாகவே பழிவாங்கப்படுகின்றார்கள்.
இது ஒரு இராஜதந்திரப் பழிவாங்கல். இங்கு பழிவாங்கியவரின்
உடலில் அல்ல. உள்ளத்தில் தான் மிகமோசமான
அடி விழுகின்றது. வன்முறை என்பது வழக்கொழிந்து போன
ஒரு விடயமாகவே உள்ளது எனவே பழிவாங்குங்கள்
பக்குவமாக வைராக்கியத்தை
வளர்த்துக் கொள்ளுங்கள்.

## எல்லாமே பாடம்தான்

எதிர்ப்பவனிடம் இருந்து
கற்றுக்கொள்.......எச்சரிக்கை
என்ற பாடத்தை
ஏளனம் செய்பவனிடம் இருந்து
கற்றுக்கொள்....... வைராக்கியம்
என்ற பாடத்தை
ஏழ்மையில் இருந்து நீ
கற்றுக்கொள் சிக்கனம்
என்ற பாடத்தை
எப்போதும் வெற்றி வரினும், தோல்வி
வரினும் - நீ
கற்றுக்கொள் - முயன்றால் தான் எதுவும்
என்ற பாடத்தை



## வாழ்க்கை இதுதான்

வாழ்க்கை என்பது
ஓர் வண்ணப்பூங்கா ? அது
வருடமெல்லாம் வண்ணத்துப்பூச்சியின்
சிறகின் கீழ்
வசிப்பதில்லை - இங்கு
இலை உதிர்க்காத மரங்களுமில்லை
மழைத்துளி படாத மண் பருக்கையுமில்லை ?
எனினும்
பூக்களைத் தந்து வண்டுகளைக் கவராமற்
போவதுமில்லை
கனிகளைத் தந்து சாதனை படைக்காமற்
போவதுமில்லை
மனிதா???
போராடி வாழும் பூமித் தாய் பிரசவித்த
பூக்கள் நாம்
பிணிகண்டு மணமுடைந்து போவதா?



# பதறாதே....... சிதறிப்போகும் உன் பலம்



தோல்வி என்றால்

பதறாதே.......சிதறாதே.......

பதறும்போது பாதிப்பலம்

சிதறிப்போகும்.........

மனது தடுமாறும்

புத்தி புதிதாய் எதையும்

நினைக்க மறக்கும்

நீ யோசிக்க யோசிக்க......... புதிதாய்

சிந்தனைக்கு எதுவும் வராது........

ஏற்கனவே....... நினைத்தது தான்

திரும்பதிரும்ப சிந்தனையை நிறப்பும்

பதறாத மனம்தான் புதுமை நினைக்கும்

புதுமை செய்தால் தான்

செயல் சிறக்கும்

செயல் சிறந்தால் அது நாளை

சாதனையாய் மிளிரும். சாதனை

பிறந்தால்..... வாழ்வு தித்திக்கும்.



# எதிரிக்கு கூட நீ பலசாலியாத்தான் தெரிவாய்



பலவீனத்தை எண்ணாதே.....
உன்னை நீ பதம் பார்க்காதே
உன் எதிரி கூட உன்
பலவீனங்களை விட
உன் பலத்தை தான் அதிகம்
கணக்குப் போடுவான் அதற்கு
மரியாதை கொடுப்பான்
பயப்படுவான் - ஆனால்
நீயோ பலவீனத்திற்கு
மரியாதை கொடுக்கின்றாய்
உன் பலத்தை எண்ணமாட்டாய்
அதை ஒரு பொருட்டல்ல
என்று ? ஏன்
உதாசீனமாய் உதற நினைக்கிறாய்
நீ மட்டும் பலத்தை எல்லாம் மறந்து
பலவீனத்தை மட்டும் தலையில்
சுமப்பவனாய் எண்ணி உன்னை நீயே
அழிப்பது ஏன்

# வலிமை அறி



இதிகாசம் கூட சொல்கிறது
இம்மாம் பெரிய மலையை சுமந்த
அனுமன் கூட ஒருகாலத்தில்
அறிந்திருக்கவில்லை தன் பலத்தை ? அதை
அறிந்த பின்தான் அதை கூட சுமந்தான்
நீருக்குள் குதி நீச்சல் தானே வரும்
தேவை வரின் வேகம் மட்டுமல்ல
விவேகமும் கூட ஓடிவரும்
சந்தர்ப்பம் உன்னை தேடிவரமுன் - நீ
சந்தர்ப்பத்தை தேடிச்செல் - ஏனெனில்
உன் ஆயுள் போதாது ?
சந்திக்க நிறை உண்டு
நீ சாதிக்கப் பிறந்தவன்
உலகத்தின் எட்டாவது அதிசயம் - தேடி
உலகெல்லாம் அலையாதே ? நீ தான்
உனக்கு இன்னமும் தெரியா ? எண்ணிப்பார்
உனக்காக நாளை மலரும்
பூக்கள் எல்லாம் புன்னகை பூக்கும்

உங்களின் வடிவங்களை மாற்றுவதற்கும்
நீங்கள் அறியாத வடிவங்களில்
உங்களை படைப்பதற்கும்
நாம் இயலாதவர் அல்லர் (அல்-வகிஆ. (குர்ஆன்).

## நம்பு



தோல்வி வரின்
துவண்டு போகாதே
பொறுமை கார்
இழப்பு ஒன்றும் இறுதியல்ல.
இடைநிலைதான்
எதிர்ப்பு வரின்
பயப்படாதே
துணிந்து கொள்
வெற்றிவரின்
இறுமாப்பு கொள்ளாதே
பணிவு கார்
இது........ எப்படித்தான்
எப்போது வரினும் நம்பிக்கையை
கைவிடாதே

இழப்பு ஒன்றும் இறுதியல்ல.
இடைநிலைதான்

## தந்தையை இழந்த மகனின்.......... மனம்



உயிரோடிருக்கையில்
உனக்கொரு சொட்டு
உணவு தர என்னிடம்
உழைப்பில்லை....
ஆனாலும் கவலைப்படவில்லை
நீ இல்லை உண்மை தான்
உன் ஆத்மாவின் அந்த
இறுதிநேர ஆசைகள்
என்னுடன் இருக்கிறது
தூக்குமேடையில் உள்ள
குற்றவாளியின்
இறுதி ஆசையை கூட
நிறைவேற்ற உலகம் நினைக்கிறது
இவ்வளவு காலமும் எனக்கென
என்னோடிருந்த உனக்காக கவலைகளை
ஒரு பொட்டலத்தில்
கட்டி ஒருபுறத்தில் போட்டுவிட்டு
விரைகிறேன்.
உன் கடைசி ஆசை
நிறைவேறும் வரை நான்
கவலைப்படவில்லை
நான் கவலைப்படின்
இழந்தவை என்ற பட்டியலில்
உன்னை மட்டுமல்ல....... உன்
கடைசி நிமிட ஆசைகளையும் தான்.

## நடக்கும் போது வீழ்கின்றாய் ஒவ்வொரு கணமும்



உனக்கே தெரியாது ?
நீ நடக்க
உன் காலடியை எடுக்கும்
ஒவ்வொரு கணமும் நீ
வீழ்கின்றாய்
மறுகணமும்
நீ ஊன்றிக் கொள்கிறாய்
மீண்டும் எழுகிறாய்
உன்னை ஒரு கோலாக எண்ணு
உன்னை ஒரு கத்திமுனையில்
சமன் செய்தால்
உன் நிறை எல்லாம்
ஓர் புள்ளியில் குவிவதாய்
எண்ணிக்கொள்
நீ நடக்கும் ஒவ்வொரு கணமும்
அப்புள்ளி
கீழ்நோக்கி வீழ்ந்து பின் மீளும்
வாழ்வில் கூட நடக்கும்போது நீ
வீழவேண்டி வந்தால்
அதையும் ஏற்றுக்கொள்

# விதியென்று சோராதே

விழும்போது
விதியென்கிறாய் - ஆனால்
வீழ்ந்து
எழும்போது மதி என்கிறாய்....... ஏன்
வீழாத மனிதர் எவருமே
இல்லையா உலகில்
வீழாமல் இருப்பதில்
இல்லை மகத்துவம்
வீழ்ந்தபின் மீள்வதில்
தான் இருக்கிறது
உலகத்தின் பிரபல்யங்கள் எல்லாமே
உணர்த்துவது இது தான்
வீழ்ந்துவிட்டால் பறவாயில்லை
விதியென்று சோராதே
சுவாசிப்பது கூட உனக்கு
சுமையாகிப்போகும் - அதன் பின்
உன்னால் அல்ல ஆண்டவனால்கூட
உன்னை முன்னேற்ற முடியாது போகும்
நீ சாதிக்கப் பிறந்தவன்
வீழ்ந்தாலும் வெறும் கையுடன்
மீளாதே மண் துணிக்கையாவது
அள்ளிக்கொள் - அது
பூமிப்பந்தின் ஒரு பாகம்



# பலவீனத்தின் மீது



பலவீனத்தின் மீது மோதியடி
வெற்றி உன் கையில்
உலகம் உன் காலின் கீழ்
நீ வெற்றி பெறும்போது
உனக்கு தெரியாத எதிரியின்
பலவீனமான பகுதியில் - நீ
பவ்வியமாக தாங்கியதன்
பலித விளைவுதான்
நீ தோற்றபோது எண்ணிக்கொள்
உன் முயற்சியை......... எதிரியின்
பலத்தின் மீது பாவித்ததன்
பலித விளைவு என்று......

(நாம் கதவை திறக்கும்போது
கூட அதன்
சுயாதீன விளிம்பின் அண்மித்த
பாகத்தில்
நாம் தள்ளும்போது இலகுவாகி
தள்ளித்திறந்து கொள்ள முடியும்...
எனினும்
நிலையுடன் இணைக்கப்பட்ட விளிம்பின்
அண்மித்த பாகத்தில்
அதை தள்ளித் திறக்க முற்படின் மிக
கடினமாகவே இருக்கும்)

# வியூகத்தை மாற்று...........
# உருவத்தை மாற்று

விஞ்ஞான யுகத்தையே விஞ்சி நிற்கும்
HIV நோய்க்கிருமி கணப்பொழுது தோறும்
தனது வடிவத்தை மாற்றிக்கொள்கிறது. இதனால்
அதனை அழிக்கமுடியாது திணறுகிறது
விஞ்ஞானம்.......இது
போலத்தான் ஆண்டவனால் கூட முடியாது உன்
முன்னேற்றத்தை தடுப்பதற்கு.......... முயற்சி என்ற
விதையிலிருந்து வியூகம் என்ற விருட்சம்
உருபெறுகிறது.
முயற்சிக்கு முன் ஆண்டவன் கூட .......அர்த்தமில்லை.
எல்லா மதங்களும் போதிக்கும்
ஆண்டவன்.........அது உன்னில்
உள்ள உள்ளீட்டுச்சக்தி அது தான் முயற்சி.

## பின்வாங்காதே...... இயன்றவரை மோது.......... புத்தியுடன்



எதிர்ப்பவர் நம் மனிதர்தான்
முடிந்தவரை மோதுங்கள்அதற்காக
முன்பின் யோசியுங்கள்
பின்வாங்கி செல்லாதீர்கள் அதற்கும்
சக்தி தேவை ? சக்திச் செலவுண்டு
தோற்றுப்போய் பின்வாங்காதீர்கள் - எதற்கும்
தோற்குமுன் தந்திரமாய் வெளியேறுங்கள்
இன்னொருருவில் இலட்சியத்தை நோக்கி
நகருங்கள் - உன் உருவை மாற்று உன்
வியூகத்தை மாற்று
உலக வரைபடத்தில் வியட்நாம்
உள்ளதை உடனே சுட்டிக்காட்ட முடியாது
அவ்வளவு சிறிது
வல்லரசுக்கே வாலை நறுக்கிய
வியட்நாம் சொல்லும் பாடம்
ஒவ்வொரு தடவையும் தன் உருவை
மாற்றிக்கொண்டு ? எதிரி கண்ணில்
ஏக்கவிதைகளை தூவிய, வரலாறு
உனக்கு சொல்கிறது.....
?இப்போது தோற்றாலும் இறுதியில் வெல்வது
நாம் தான்?.

# விழித்திடு


கனவு காண்
தூங்காதே விழித்திடு
கனவை வரையறு ? அதை
இலட்சியமாக்கு
இலக்கு நோக்கி
செயற்படுத்து
உறங்காத கண்மணிகளோடு



# காதல் ஆசை

ஆசைகொள்
அகிலம் உனக்கு சொந்தம்
அயர்ந்து தூங்காதே
அடுத்துவரின் காலடி உன் தலையில்
முன்னேறு
முடிந்தவரை (எல்லையில்லை)
செல்.... செல்.... துவளாதே
ஏறு ஏறு முன்னேற
வெற்றி தேவதை உன் விலாசம்
வேண்டி தேடி வருவாள் - நாளையல்ல
இன்றே
உன் எண்ணம் உதித்த கணமே
உலகம் உன்னை காலடியில் வசப்படும்
சுட்டெரிக்கும் சூரியன் சுண்டுவிரலில்
சிறைப்படும்
நீ தொடரத் தேவையில்லை வெற்றியை
வெற்றி உன்னைத் தொடர்ந்து அலையும்
அலை கடல்
நதி, காடு, மேடு, கனல், புனல் தாண்டி
உலகம் மறந்து
உன்னை மட்டும் காதலிக்கும்
உண்மைக் காதலியாய் அல்ல தன்னுயிர் தந்து
உன்னுயிர் காக்கும் போராளியாய்
ஏழு கடல்களும் உன் புகழ் பாடும்
வாயில்லா வாவிகள் உன் பெயர் சொல்லும்
பூ(மி) எல்லாம் உன் வாசம் வீசும்

# நீ முயற்சி செய் அதுபோதும்



உலகின் கண்கள் மட்டுமல்ல
உலகின் ஒவ்வொரு கண்ணிமை கூட
உன்னை உன்னிப்பாய்...... உற்றுநோக்கும்
மாணிக்கம் கூட உன்முன்
மதிப்பிழக்கும் - மண் துளியாகும்
பொறாமைப்படுபவன் தானே
பொசுங்கிப்போவான்
எதிரி உன்னை எண்ணி
எண்ணியே தன்னால் சாவான்
முன்னேறு முன்னேறு துவண்டுவிடாதே
பமீர் முடிச்சிலிருந்து தூக்கி எறியப்பட்டு
பாதாளமாய் மரியானா ஆழியுள்ளும்
வீசி எறியப்பட்டு வீழலாம் - கலங்காதே
வரலாற்றில் வீழாத மனிதர் இல்லை
இருந்தால் சொல்
சின்னக்குழந்தை கூட மெல்ல
நடக்கையில்
நித்தம் வீழ்கிறது
மீண்டும் எழுவாய்
முடிவிலி வரை செல்வாய்
முயற்சியை கைவிடாதவரை
சுவாசி ஒட்சிசனையல்ல
முயற்சியை காதலி

**பமீர் முடிச்சென்பது உலகின் மிக உயரமான மலை உச்சி**



# முயற்சி செய்

நீ நடவாதவரை புல்லுருவிகூடப்
பணியாது
பாதைவிடாது..... நீ நட.... நட.....
விருட்சம்கூட விலகிநிற்கும் உன்
பாதை ஓரமாய் - மட்டுமல்ல
சிரம்தாழ்த்தும் - மலர் தூவும்
தென்றலைக்கூட உன்பின்னால் தொடர்
என்று விரட்டியடிக்கும்

உழைப்பில், உயரிய உழைப்பில் ஈடுபடுங்கள், தாமதம் சிறிதும் வேண்டாம். மரணம் நாளுக்கு நாள் நம்மை நெருங்கிக் கொண்டிருக்கிறது. சோம்பி இருக்க வேண்டாம். எது எது எப்பொழுது நடக்க வேண்டுமோ, அது அது அந்தக் காலத்தில், நடந்தேறும் என்ற பொய்யெண்ணத்தில் சும்மா இருக்காதீர்கள்! அப்படி எதுவும் நடக்கப்போவதில்லை.

வாழ்நாள் குறுகியது. நாம் ஆசைப்படும் உலகப்பொருட்கள் நிலையற்றவை. அழிந்துபடும் இயல்புடையவை. ஆனால் தமக்காக வாழாமல்,பிறருக்காக வாழ்பவர்களே உண்மையில் வாழ்பவர்கள் ஆவர். பிறரெல்லாம் வாழ்ந்தாலும் வீழ்ந்தவர்களே, இறந்து பட்டவர்களே.

- சுவாமி விவேகானந்தர் -

## முயற்சிசெய்........
## நீ பெறும் கையாள் அல்ல




வெறு கையல்ல உன்னிடம் அதில்கூட
பத்து விரல்கள் உண்டு
இம்மாம் பெரிய உலகை கூட மகலன்
ஆயிரம் கடற்கலங்கள் கொண்டு
சுற்றவில்லை
அலெக்சாண்டர் கூட கோடிக்கணக்கில்
குதிரை கொண்ட படை
கண்டதில்லை
ஜீலியர்சீசர் கூட லட்சம் கடற்கலம் கொண்ட
படை கண்டதில்லை
ஒற்றைக் கலத்தில் தான் மகலன்
உலகையே
சுற்றி வந்தான்
நீ மட்டும் எதுவுமில்லை என்று விட்டு
ஏக்கத்தோடு முன்னேறுபவனை பார்க்காதே.

ஏழை என்ற எண்ணத்தை, வறுமை பற்றிய அச்சத்தை மனத்திலிருந்து அறவே ஒதுக்கித் தள்ளுங்கள். எந்த விதத்தில் நீங்கள் ஏழை? கோச்சு வண்டியும், ஒரு ஜோடிக் குதிரைகளும் இல்லையே என்று ஏங்குகிறீர்களா? இட்ட பணியை முடிக்க சாரைசாரையாக வேலையாட்கள் இல்லையே என்றுவருந்துகிறீர்களா? அதனால் என்ன, குடியா முழுகிப்போயிற்று? அல்லும் பகலும் பிறருக்காக நீங்கள்
உங்கள் ரத்தத்தைச் சிந்தி உழைப்பீர்களானால், இந்த வாழ்க்கையில் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை என்பதை நீங்கள் உணர்வீர்கள்.

நமக்கு நம்பிக்கை வேண்டும். நாம் செய்யும் செயல்களில் ஈடுபாடு வேண்டும். நம்மிடமே வேண்டும். வலிமையே வாழ்வு, அது இன்மையே அழிவு, பலமே வாழக்கை பலவீனமே மரணம்.
- சுவாமி விவேகானந்தர் -

# செயல் தொடங்கு
# வளம் தானே வரும்

வளமில்லை என்று ஏங்காதே
இருப்பதை கொண்டு
இயன்றவரை செய் (முடிவில்லை)
செயலை தொடங்கு
வளம் தேடிவரும்
எதையும் நுட்பமாய் பாவி
இருப்பதே போதும்
இன்னும் பெருகும்
இம்மாம் பெரிய கோலியாத்தே
வீழ்ந்தது தாவீதின் சிறுதுண்டு
கல்லால்தான்
உன் செயலில் வேகம் இருந்தால்
வலி தெரியாது ? வெல்வாய்
வளம் எல்லாம் பெறுவாய்



# முயன்று பார்




இறகில்லாத ஏவுகணை கிரகம் தாண்டிப்
பறக்கிறது
துடுப்பில்லாத நிலவு விண்மீண்
புடைந்து நீந்துகிறது
வாயில்லாத வாவி யாரிடம் கற்றது
இசை........
கானம் பாடுகிறது
எறும்போ தன்னை விட
எம்மாம் பெரிய உணவை
சுமக்கிறது....
நீ மட்டும் ஏன் முடியாதா
முயன்று பார்.




# நிரந்தர மகிழ்ச்சிக்கு

நிரந்தரமான மகிழ்ச்சி தேடி...
நித்தம் அலையும் நீ ஏன்
முயற்சியை கைவிடுகிறாய்
திரும்பத் திரும்ப முயற்சிசெய்...
அப்போது நீ
முயற்சியாளன் என்று மகிழ்ச்சி கொள்
முயற்சி என்பது கடவுளின்
மிகப்பெரிய கொடை
தோல்விகளை காண்கிறபோது
துவளாதே சோராதே
தொடர்ந்து தோற்றுப்போனாலும்
கவலை கொள்ளாதே
கச்சிதமே அது உரமாகட்டும் - அப்போ
நிரந்தர மகிழ்ச்சியை அனுபவிக்க
நீ பக்குவம் பெறுவாய்


முயற்சி என்பது கடவுளின்
மிகப்பெரிய கொடை




# தேடிச்செல்



கனவுகள் எல்லாம் காணும்
கணப்பொழுதிற்கு ? பிரமிப்பு
கண்விழித்துப் பார்ப்பின்
கண்களுக்கே முடியுமா நம்மால் - வியப்பு
கனவுகளோடு வாழ்....
காலம் வென்ற அறிஞர் அப்துல்கலாம் - குறிப்பு
கனவோடு நில்லாதே...
காலம் உன்னைத் தேடிவருவது அழகல்ல ?
நீ
காலத்தை தேடி ஓடு....
கைகளில் ஏதுமில்லை என்று எண்ணாதே
காரியத்தை தொடங்கு.... நம்பிக்கை
பிறக்கும்
அது போதும்....
கனவுகள் எல்லாம் நிஜயமாகும்.




## நீ நினை அதற்கான
## பலம் தானாகவே வரும்



நீ கேட்காதவரை
உனக்கு உதவி கிடைக்காது.... நீ
தட்டினால் தான் (கதவு திறக்கப்படும் ) இது
இயேசுபிரான் சொன்னமொழி
நீ நகர்த்தாமல் எதுவும் நகராது
நகர்ந்து கொண்டிருப்பவை கூட
நீ தடுக்காவிடின் எதுவும் நிற்காது
இது பௌதிகம் சொல்லும் மொழி
நீ முயலாமல் கனவுகள் மலரா
முயற்சியை சுவாசி... உன்
மூச்சுக்காற்று தென்றலாம்
கனவு மொட்டுக்கள் சட்டென்றே
பூவாகும்
எது நிகழவேண்டுமோ... அது
நிகழும் நீ நினைத்தால் மட்டும்

**நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய்**
**உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால்**
**வலிமை படைத்தவன் ஆவாய்.**
**- சுவாமி விவேகானந்தர் -**


# முயற்சிசெய்
# வியூகம் தானே



வியூகம் என்பது நீண்டநாட்கட்கு
பழுதடையாதிருக்கும் உணவுப்பண்டமல்ல
அது விரைவில் எதிரிக்கு விளங்கிவிடும்
பாவித்த வியூகத்தை மீண்டும் பாவிக்காதே
ஒரே வியூகத்தை எப்போதும் கையாளாதே
ஒருமுறை பாவித்த வியூகத்தை மறுமுறை
பாவிக்காதே
எதிரி உனக்கு ஏகப்பட்ட
வியூகம் சொல்லித்தருவான்
எதிரி உனக்கு ஆயுதம் தருவான்
மாவோ சொன்னபடி
எதிரி நீ பாவிக்க வேண்டிய
ஆயுதத்தை தெரிவு செய்வான்
எதிரியை எண்ணிக் கலங்காதே
எதிரி ஒரு துரும்பு (அல்ல)
எச்சரிக்கையாய் இரு.....


# கவலை என்பது

நேற்று என்று நழுவிப்போன காலத்தை
எட்டிப்பிடிக்க எண்ணி கையை விரிக்கையில்
இன்று என்றும் கையில் இருக்கும்
காலத்தையும் நழுவிப்போக விடும்
பயனற்ற முயற்சி
இன்றை நழுவவிடாதே நாளை வரும்
வரை வெறும்கையோடு
காத்திருக்கும் பரிதாபத்தை....
உன்னால் தவிர்க்க முடியாது.



# நேற்று போகட்டும், இன்றும் நாளையும் உனக்குத்தான்

இன்று உன் கையில்
இருந்து நழுவிப்போனால்
நாளை வரும் வரை வெறும் கையோடு
காத்திருக்க வேண்டும்
நேற்று என்ற காலத்தை
தேடாதே கவலைப்படாதே



நல்லனவோ, தீயனவோ ஒரு செயலைச் செய்து விட்டால் மீண்டும் அதைப்பற்றி ஒருபோதும் நினைக்காதே, செய்தது செய்ததாயிற்று. மரணமே எதிர்வந்தாலும் பலவீனத்திற்கு இடம் கொடுக்காதே.
கழிந்ததை எண்ணி கலங்காதே சென்றதைக் குறித்து சிந்தியாதே.
உன் நற்செயல்களையும்
நினைவில் வைக்காதே சுதந்திரமாக இரு.
- சுவாமி விவேகானந்தர்

ஒரு விடயத்தின் ஒரு செயலின்
விளைவு பற்றி மனித மனம்
கவலைப்படுவதும், பயப்படுவதும்
அனேகமாக அந்த செயலின்
அல்லது அந்த விடயத்தின்
விளைவினால் உண்மையில்
ஏற்படும் பாதிப்பை விட
அபரிமிதமான அளவிலேயே இருக்கும்

# கவலை ஒரு துரோகி,
# விரட்டு உடனே

கவலை ஒன்றும் கடவும் இல்லை
கட்டியணைத்து ஆறுதல் சொல்ல
காதலியுமல்ல... அது
கட்டியிருக்கும் துணியையும்
கண் தூங்கும் நேரத்தில்
கழற்றிச் செல்லும்
தோற்றுப்போகும் போது உன்னை
தேற்றிக்கொள்ள.... போயும் போயும்
தேவைப்படுவது.... துரோகியின்
துணையா.... துரோகி உன்னோடு
துணை வருவான் என்று
தூங்கும்போது கூட
துளியளவும் எண்ணாதே
இப்போதே மற கவலையை
கவலை கண்ணுக்கு தெரியாத
காத்திரமான ஒரு துரோகி.





**கவலை கண்ணுக்கு தெரியாத**
**காத்திரமான ஒரு துரோகி.**

கவலை மற..... கெட்ட கனவாய்.....
எத்தனை கனவுகளை ? நாளும்
காண்கின்றான் - நாளை
அத்தனையும் - மறந்து போகிறோம்
அது கனவென்கிறாய் - ஏன்
கவலையையும் கனவாய் நினைத்து
கச்சிதமாகவே மற.....



## கவலை....மற

# எதிர்ப்பு இருந்தால் தான்



எதிர்ப்புக்கள்
உதவுமளவுக்கு
உன்வாழ்வில் முன்னேற....
நண்பர்கள்... உதவமுடியாது
எதிர்ப்புவரின்
ஆற்றல் பெருகும்... அது ஒரு
ஆலோசகர் எதிர்ப்பு உள்ளவரை
விழிப்புணர்வோடிருப்பாய்
வளர்ந்து செல்வாய்
உன் திறமைகளை நிரூபிக்க
நிதர்சனப்படுத்த களமமைத்துக் கொள்வாய்
உன்னை பாதை வழுவாமல்
பயணிக்க எதிர்ப்பு எப்போதும் வழிகாட்டும்
எதிர்ப்பை சுவாசிக்கின்ற போதே
மனதில் உற்சாகம் பிறக்கும்
எதிர்ப்பை.... எண்ணி
வீழ்ந்து விடுவோமோ என்று அச்சத்தில்
கால்களை எடுத்து வைக்கையில்.... நீ
தானாகவே ஏறிச் செல்கிறாய். எதிர்ப்பும் ஒரு
ஏணிதான்
துணிந்து செல்.


# எதிரி என்னடா?





எதிரி ஒன்றும் கடவுளல்ல
விண்ணில் இருந்து வீழவில்லை
வால்வெள்ளியல்ல
மண்ணை முட்டி முளைக்கவில்லை
விருட்சமல்ல
அலை அல்ல கடலல்ல ஆழிப்பேரலை
புயலல்ல
கடவுள் படைத்த ஒருவன்
கடவுளே பலவீனன்
கடவுள் விட்ட தவறில்
ஒன்று தான்
மனிதனை வாட்டும்
புற்றுநோய்.

(மனித உடலின் கட்டமைப்பு
உருவாக்கத்திற்கு பொறுப்பான
நிறமூர்த்தங்கள் (மரபணு ஜீன்)
அலகுகள் யாவற்றையும் தொகுத்த கடவுள்
அக்கடமைப்பு உருவாக்கத்திற்கு
பொறுப்பான அலகுகள் (நிறமூர்த்தங்கள்)
உருவாக்கப்படும்போது ஏதேனும் தவறுகள்
நிகழின்
அதை சீர்செய்ய மேலும் ஒரு விசேட அலகு
ஒன்றை
தயாரித்துள்ளார். அது P53 என்னும் பெயருடைய
விசேட மரபணு ஆகும்.
இதன் கட்டமைப்பில் ஏற்படும்
தவறுதலாலேயே
புற்றுநோய் ஏற்படுகிறது
சுருங்கக்கூறின்
கணக்காய்வினரே கணக்குகளை
தவறவிடுதல் போன்ற ஒரு நிகழ்வு
ஆகும்).



இழப்பை சந்தித்த முதல் மனிதன் - நீயுமல்ல
இழப்பு சந்தித்த முதல் மனிதன் - நீயுமல்ல
இழப்பு ஒன்றும் புதியவையுமல்ல
இழப்பை சந்திப்பது இதுதான் முதல்
தடவையுமல்ல
வரலாற்றில்... அலெக்சாண்டர் தொடக்கம்
ஆபிரகாம்லிங்கன்.... நெப்போலியன்.....
நெல்சன்மண்டேலா.... ஜீலியர் சீசர்....
வின்சன் சோச்சி வரை நீள்கிறது
சூரியனை நோக்கிப்பற....
சாம்பலாயினும் மீண்டும் எழுவாய்
Pheonix ? பறவையாய் விதியென்று சோராதே.

# ஏற்றுக்கொள்




# வலி..........மை



வலியை எண்ணி வருந்தாதே
வலிமை என்ற சொல்லிற்கூட வலி என்ற
பகுதி உண்டு இன்றேல்இலக்கணம் இறந்துபோகும்
காயம் கண்டு கண்ணீர் வடிக்காதே
கலங்காதே கணத்தில் ஆறும் - நேரே செல்
கனவுகள் எல்லாம் காணும் முன்பே
நிஜமாகும் காலம் துணையாகும்
இயற்கை இனிய நண்பனாவான்
வரலாறு உனக்கு வழிகாட்டியாகும்
வானம் வசப்படும்
நினைத்தது மட்டுமல்ல
நினைக்காது கூட நிகழ்ந்து ? ஏறும்
பழித்தவர்கள் பாதம் கழுவுவர்
வலிகள் எல்லாம் துளிகளாகி
தூளாகிப்போகும்
எப்போதும்
வலிகள் தெரியாது மனதில்
வடுக்கள் தோன்றாது
வெற்றி உன்னைத் தொடரும்
உன் செல் நெறி சரியாக
உள்ளவரை மட்டும் தான்.

உன்னுடைய போர்க்களத்தில்
உன்செல் நெறி தவறாத வரை கிடைக்கும்
தோல்வியெல்லாம் - வெற்றியை
தேடிச்செல்லும் - ஏமாற்றிப்பெறும்
வெற்றியைவிட.... ஏராளம் பெறுமதி
இவைக்கு
உன் செல் நெறி தவறின் கிடைக்கும்
வெற்றிகூட தோல்வியை தான் தேடித்தரும்
கிடைத்த வெற்றிகூட நினைக்கும் தோறும்
நெஞ்சை உருக்கும் நெருப்பாய் கனன்று
செல்நெறி தவறாதவரை
எதிரிகூட ஏமாறுவான் நிச்சயம்
எதிரியை துணிச்சலாய் தரிசி
நீ பாவிக்க வேண்டிய ஆயுதம் எதுவென்று
எதிரிதான் தீர்மானிப்பான்
வியூகம்கூட சொல்லித்தருவான்
வீழ்த்த நினைத்தே வளர்ந்து விடுவான்
ஆணிவேரை அறுக்க நினைக்கும் நீரோட்டம்
தான்
ஆற்றங்கரை மரங்களை விருட்சமாக்கிறது
வேடிக்கை வினோதமல்ல.... நிஜம்
நேரில் தரிசித்தவை.... நேரில் தரிசி



வீழ்த்த நினைத்தே வளர்ந்து விடுவான்

# செல்நெறி


நீ நடவாதவரை..
புல்லுருவிகூடப்
பணியாது பாதைவிடாது...
நீ நட...
விருட்சம்கூட.. விலகிநிற்கும் உன்
பாதை ஓரமாய் - மட்டுமல்ல
சிரம் தாழ்த்தும் - மலர் தூவும்
தென்றலைக்கூட உன்பின்னால்
தொடர் என்று விரட்டியடிக்கும்...